1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

அ.வ.எண்.351 /2016

2021 வது ஆண்டு நவம்பர் மாதம் 09ம் நாள் P.W1ன் சாட்சிய வாக்கு மூலம் (1969ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு. சாமுவேல் ராஜ் | வட்டம் : | பாளையங்கோட்டை |
| த/பெ : | திரு.செல்லதுரை | கிராமம் : | |
| வயது : | 51 | மதம் : | |

**<u>09.11.2021 முதல் விசாரணை:</u>** நான் வாதி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். 02.08.1999தேதியிட்டு வடிவேல் அவர்களுக்கு அனந்தராமன் எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.1. மாதிரி வரைபடம் வா.சா.ஆ.2. எனது பெயருக்கு ஏற்பட்ட கிரைய ஆவணம் வா.சா.ஆ.3. (வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண்.351/2016**

01.03.2022 – வா.சா.1 திரு.சாமுவேல் ராஜ்

**வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**

07.08.1982 தேதியிட்ட அருணா அன் கோ ரவிந்தரன் வி.பி, அனந்தராமனுக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.4. 18.01.2016 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.5. 02.04.2016 தேதியிட்ட தீர்வை ரசீது வா.சா.ஆ.6. 28.03.2016 தேதியிட்ட தீர்வை ரசீது வா.சா.ஆ.7. பட்டா எண்.32 ன் நகல் வா.சா.ஆ.8.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண்.351 /2016**

07.04.2022 – வா.சா.1 திரு.சாமுவேல்

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா ஆனது பிரதிவாதி தபசில் சொத்தை வேறு ஒருவருக்கு மோசடியாக கிரையம் செய்தது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தபசில் சொத்தில் எனக்கு முழு உரிமை மற்றும் அனுபவமும் வேண்டி வழக்கு தொடர்ந்து உள்ளேன். சொத்து எனக்கு உரிமையானது என்று விளம்புகை கோரி தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிராது பரிகாரத்தில் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளேன் என்றால் சரிதான். தபசில் சொத்து அங்கீகாரம் பெறப்பட்டாத மனை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன். தாவா தாக்கல் செய்த சமயத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் தான் கோரியிருந்தேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் விளம்புகை பரிகாரம் கோரரதால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று கட்சி செய்திருந்தார் என்வே 2 வதாக ஒரு வழக்கறிஞர் நியமித்து பிராதை சீர்திருத்தம் செய்தேன். தபசில் சொத்தை நான் 27.01.2000 த்தில் கிரையம் பெற்றேன். கிரையம் பெறும் போது வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தேன். மேற்படி வில்லங்க சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 07.1.2016 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் தான் தாக்கல் செய்துள்ளேன். கிரையம் பெறும் சமயத்தில் எத்தனை ஆண்டுகளுக்கான வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தேன் என்றால் சரியாக நினைவில்லை. கிரையம் பெறும் போதே அ.வ.எண்.218/1982 வழக்கு குறித்து தெரியாது. நான் வில்லங்க சான்றிதழ் பார்த்த போது அனந்தராமன் பவர் ஏஜெண்ட் வடிவேலன் என்பது மட்டுமே இருந்தது. வா.சா.ஆ.1 வடிவேலு என்பவருக்கு அனந்தராமன் எழுதி கொடுத்த பவர் பத்திரம். அதில் குறிப்பிடப்பட்டுள்ள 1982 ன் பூர்வீக பத்திரமான 1981 பத்திரத்தை நான் பார்க்கவில்லை என்றால் நினைவில்லை.

வழக்கு தொடர்வதற்கு தகவல் சொன்னது நான் தான். தபசில் சொத்து அமைந்துள்ள மனைபிரிவுகள் ஆதியில் செய்யது முகமது ராவுத்தர் என்பவருக்கு பாத்தியப்பட்டு இருந்தது. அவர்களது வாரிசுகள் அருணா அன் கோவிற்கு விற்பனை செய்துவிட்டனர். 1982ம் ஆண்டு வழக்கு அருணா அன் கோ ரவிந்திரன் என்பவரையும் சேர்த்து தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

## 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

## அ.வ.எண்.351/2016

06.07.2022 – வா.சா.1 திரு.சாமுவேல் ராஜ்

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதியின் முன் பாத்தியஸ்தர்கள் 1982ம் வருட பாகப்பிரிவினை வழக்கு குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. மேற்படி வழக்கில் ஆணையர் அறிக்கையையோ, அல்லது இறுதிநிலை தீர்ப்பாணையையோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதை எனது முந்தைய வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 7ல் குறிப்பிட்டுள்ளபடி இறுதிநிலை தீர்ப்பாணையில் குறிப்பிட்டுள்ளதா என்றால் அதை நான் பார்த்தது இல்லை. நான் இறுதிநிலை தீர்ப்பாணையை எனது வழக்கறிஞர் காட்ட நான் பார்க்கும் போது அதில் சர்வே எண்.325 தென்கிழக்கு 37.8 சென்ட் நிலம் முகைதீன் பிச்சைக்கு ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் இறுதிநிலை தீர்ப்பாணையில், மேற்படி சர்வே எண்ணின் தென்கிழக்கு என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் என்னிடம் காட்டிய வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ–8 கூட்டுப்பட்டாவில் 1,2ம் பிரதிவாதிகளின் பெயர் உள்ளது என்றால் அது கூட்டுப்பட்டா ஆகும். நான் ஆவணங்களை சரியாக பார்க்காமல் தபசில் சொத்தை தவறுதலாக கிரையம் பெற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. அரசால் அங்கீகரிக்கப்படாத ஒரு வீட்டு மனை பிரிவை நான் கிரையம் பெற்றது தவறு என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில், இறுதிநிலை தீர்ப்பாணையையும், பார்வதி நகர் வரைபடத்தையும் ஒப்பீட்டு பார்த்தால், மேற்படி தவறு தெரியவரும் என குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். ஆனால் இறுதிநிலை தீர்ப்பாணையில் தென்கிழக்கு என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பிராதில் மேற்படி விபரத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். பிராது பத்தி 7 லும், பார்வதி நகர் லே அவுட்டில் சர்வே எண 325ல் தென்கிழக்கு மூலை

உள்ளது என இறுதிநிலை தீர்ப்பாணை வழங்கியுள்ளது. எனது பிராதில் மற்றும் அனைத்து ஆவணங்களிலும் இறுதி நிலை தீர்ப்பாணையை அடிப்படையாக வைத்து மட்டுமே வழக்கு பரிகாரம்கோருகிறேன் என்றால் சரிதான். ஆனால் இறுதிநிலை தீர்ப்பாணையில் நான் பிராதில் கூறும் படி சர்வே எண்.325 தென்கிழக்கு என குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையை வழக்கில் நான் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–6,7 தீர்வை ரசீதுகள் கூட்டுப்பட்டாவில் உள்ள அனைத்து நபர்களுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்வை ரசீது எனது தனிப்பட்ட பிளாட் குறித்த விபரம் துலங்காது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 எந்த ஆண்டு யாரால் தயாரிக்கப்பட்டது என்றால் ரவீந்தரன் என்பவர் தயார் செய்துள்ளார். அருணா அன் கோ என்ற முத்திரை உள்ளது. தேதி குறிப்பிடவில்லை. நான் தாவாவில் தாக்கல் செய்துள்ள வரைபடங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தனக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை தான் வேதநாயகம் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த தபசில் சொத்தானது எனக்கு பாத்தியப்பட்டது என பரிகாரம் கோராமல் 1ம் பிரதிவாதி எழுதி கொடுத்த ஆவணத்தை செல்லதக்கதல்ல என பரிகாரம் கோரியுள்ளதால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.